# திருக்கோட்டியூர்நம்பி வைப4வம்

ஸ்ரீ.உ.வே.க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எம்.ஏ.பி.எல். (ஸுத3ர்ஶநர்)

ஆளவந்தார் அவதரித்துப் பதினொரு வருடங்கள் கழிந்தபின் கி.பி.987 ஸர்வஜித் வருஷத்திலே, வைகாசி ரோஹிணியில் காஶ்யப கோ3த்ரத்தில் ருக்3ஶாகை2யில் பெரியாழ்வாருக்கு பரமஆப்தரான செல்வநம்பியின் வம்ஶத்திலே ஸ்ரீபுண்ட3ரீகர் என்னும் நித்யஸூரியின் அம்ஶமாய், பூர்வஶிக2 ஸ்ரீவைஷ்ணவப்3ராஹ்மணகுலத்திலே குருகேஶர் (திருக்குருகைப்பிரான்) என்னும் திருநாமமுடையவராய் அவதரித்தவர் திருக்கோட்டியூர்நம்பி. நாத2முனிகளிடமிருந்து உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிகளின் மூலம்கிடைத்த ப4விஷ்யத3ாசார்யவிக்3ரஹத்தை ஆளவந்தார் தம்சரமத3ஶையிலே இவரிடம் ப்ரஸாதி3த்து, அதுவந்த வழியையும் அருளிச்செய்து, ரஹஸ்யார்த்த2ங்கள் அனைத்தையும் ஸ்ரீராமாநுஜருக்கு உபதே3ஶிக்கும்படியும் நம்த3ர்ஶநத்தை அவர் திருநாமத்தாலே விளங்கவைக்கும்படியும் நியமித்துச்சென்றார்.

ஆளவந்தார், அவருடைய ஶிஷ்யர்கள் காலம் வரையில் ''ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்'' என்று மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் அருளிச்செய்தபடியே ஒவ்வொரு ஆசார்யரும் ஶிஷ்யர்களின் தகுதியை ஆராய்ந்து, அவர்கள் கைங்கர்யங்கள் முதலானவை செய்து மிகவும் ப்ரார்த்தி2த்தபின்னரே அவர்களுக்கு அர்த்த2ங்களை உபதே3ஶம் செய்தனர். இந்த ஆசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் (கைங்கர்யம் முதலானவற்றைச் செய்வதால் உகக்கும் ஆசார்யர்கள்) என்று அழைக்கப்படுவர். இந்த முறையில் உபதே3ஶம் தொடர்ந்தால் த3ர்ஶநம் வளராது என்று உணர்ந்த ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜரை க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராக (நிர்ஹேதுக கருணையால் உகந்து உபதே3ஶிக்கும் ஆசார்யராக) உருவாக்கவேண்டும் என்று திருக்கோட்டியூர்நம்பியிடம் நியமித்திருந்தார். அப்படி உருவாக்குவதற்குப் பலவகைப்பட்ட முயற்சிகளைத் திருக்கோட்டியூர்நம்பி மேற்கொண்டார்.

தம்மிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெற்று த்3வயத்தின் அர்த்த2த்தைக் கேட்டிருந்த ஸ்ரீராமாநுஜரை, திருமந்த்ரார்த்த2ம், சரமஶ்லோகார்த்த2ம் ஆகியவற்றைக் கேட்பதற்கு, திருக்கோட்டியூர்நம்பியை அணுகும்படி பெரியநம்பி நியமித்துவிட்டார். அதன்படியே ஸ்ரீராமாநுஜரும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி அவ்வூரிலுள்ளவர்களை ''நம்பி திருமாளிகை எங்கே?'' என்று கேட்டார். அவர்கள் ''அதோ தெரிகிற வீடுதான் நம்பியுடையது'' என்று கூறினார்கள். உடையவர் அவ்விடத்திலிருந்து அந்தத் திருமாளிகைவரையிலும் த3ண்டனிட்டுக் கொண்டே எழுந்தருளித்திருமாளிகையை அடைந்தார். அதுவரையில் அவ்வூரிலுள்ளாருக்கு நம்பியின் பெருமை விளங்காமலேயே இருந்தது என்றும், இந்நிகழ்ச்சியைக் கண்டபிறகே அவ்வூரிலுள்ளவர்கள் நம்பியின் ப்ரப4ாவத்தை அறிந்தனர் என்றும் ஆறாயிரப்படி கு3ருபரம்பராப்ரப4ாவம்

கூறுகிறது. ராமாநுஜரும் நம்பியை த$_3$ண்டனிட்டு, 'அடியேனுக்கு ரஹஸ்யார்த்த$_2$ங்களை உபதே$_3$ஶிக்கவேணும்' என்று ப்ரார்த்தி$_2$த்தார். ஆனால் நம்பி இவரை க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராக உருவாக்கவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி இவருக்கு எளிதில் உபதே$_3$ஶம் செய்ய இணங்கவில்லை. ஆகையால் உடையவர் ஸ்ரீரங்க$_3$ம் திரும்பினார். அதற்குப்பின் ஸ்ரீரங்கத்திற்கு வந்த நம்பியிடம் ஸ்ரீரங்க$_3$நாத$_2$னே அர்ச்சகர் மூலமாக ஸ்ரீராமாநுஜருக்கு ரஹஸ்யார்த்த$_2$ங்களை உபதே$_3$ஶிக்கும்படி நியமித்தார். அதற்குப்பின் நம்பிநியமனத்தாலே திருக்கோட்டியூர் சென்ற ராமாநுஜருக்கு உடனே உபதே$_3$ஶிக்கத் திருவுள்ளம்பற்றாமல், அவரை பதினெட்டு முறை ஊர்சென்றுவரும்படி அலைக்கழித்தார். இப்படி நம்பி அலைக்கழித்ததைப்பற்றி நம்பிஶிஷ்யர் ஒருவரிடம் ஸ்ரீராமாநுஜர் மிகவும் வருத்தத்துடன் விண்ணப்பித்தார். அதை அவரும் நம்பியிடம் சொல்ல, ஸ்ரீராமாநுஜருக்கு ரஹஸ்யார்த்த$_2$ம் கேட்கவேணும் என்னும் விருப்பம் மிகவும் வளர்ந்திருப்பதைக்கண்டு உகந்து, அந்த ஶிஷ்யர் மூலமே ஸ்ரீராமாநுஜரை த$_3$ண்டத்தோடும், பவித்ரத்தோடும் ஒருவராய் வரும்படி நியமித்தார் நம்பி. உடனே கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு திருக்கோட்டியூர் சென்று நம்பிதிருவடிகளில் த$_3$ண்டன் ஸமர்ப்பித்து நின்றார் ஸ்ரீராமாநுஜர். "உம் ஒருவரைத்தானே வரச்சொன்னோம். இருவரைக் கூட்டிவந்திருக்கிறீரே?" என்று நம்பிகேட்க "த$_3$ண்டத்தோடும் பவித்ரத்தோடும் வரச்சொன்னபடியாலே த$_3$ண்டமும் பவித்ரமும் போன்ற இவர்களைக் கூட்டி வந்தேன்" என்றார் ராமாநுஜர். "இதில் யார் த$_3$ண்டம் யார் பவித்ரம்" என்று நம்பி கேட்க, உடையவரும் முதலியாண்டானைக்காட்டி 'இவர் த்ரித$_3$ண்டம் போன்றவர்' என்றும், கூரத்தாழ்வானைக்காட்டி 'இவர் பவித்ரம் போன்றவர்' என்றும் கூறினார். நம்பியும் 'அப்படியானால் இவர்களைத்தவிர வேறு எவருக்கும் சொல்லவேண்டாம்' என்று தம்திருவடிகளைத்தொட்டு ஆணையிடும்படி செய்து, திருமந்த்ரம் எனப்படும் திருவஷ்டாக்ஷரத்தின் பொருளை அவருக்கு உபதே$_3$ஶித்தார்.

ஸ்ரீராமாநுஜரும் மிகஉகந்து, மறுநாளே அவ்வூரிலிருந்த தெற்காழ்வான் என்னும் நரஸிம்ஹர்ஸந்நிதி$_4$யில் இவ்வர்த்த$_2$த்தைக் கேட்கவிரும்பிய பல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவ்வர்த்த$_2$த்தை உபதே$_3$ஶித்தார்.

இதைக் கேள்விப்பட்ட நம்பி உடையவரை அழைத்து "இந்தப்பரம ரஹஸ்யார்த்த$_2$த்தை வேறொருவரிடமும் சொல்லவேண்டாம் என்று நான் ஆணையிட்டிருக்கப் பலருக்குச்சொல்லிவிட்டீரே? அதன் பலன் என்ன தெரியுமா?" என்று கேட்டார். "ஆசார்யநியமனத்தை மீறிய எனக்கு நரகமே பலன்" என்றார் ஸ்ரீராமாநுஜர். "இது தெரிந்திருந்தும் ஏன் உபதே$_3$ஶித்தீர்?" என்று கேட்டார் நம்பி. அதற்கு ஸ்ரீராமாநுஜர் "அடியேன் ஒருவன்தானே நரகம் போகப்போகிறேன். தேவரீர்திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு பலருக்கு உபதே$_3$ஶித்தபடியாலே கேட்டவர்கள்

பலரும் உய்ந்து போவார்களே என்றே சொன்னேன்'' என்று கூறினார். அதைக் கேட்டவுடன் ''இவரே நம்மாழ்வாரால் 'பொலிக பொலிக'வில் குறிப்பிடப்பட்டு ஆளவந்தார்வரையில் உள்ள ஆசார்யர்களால் எதிர்பார்க்கப்பெற்ற ப$_4$விஷ்யத$_3$ாசார்யர்'' என்று நிர்ணயித்து, சுயநலம் கருதாமல் பிறர்நலமே கருதிய இவரது பெருங்கருணைக்கு உகந்து, 'எம்பெருமானாரே! வாரும்' என்று அவரை எடுத்து அணைத்துக்கொண்டு ''இதுவரை இந்த த$_3$ர்ஶநம் பரமவைதி$_3$கஸித்$_3$த$_4$ாந்தம் என்றே பெயர் பெற்றிருந்தது. இன்று முதல் இது 'எம்பெருமானார் த$_3$ர்ஶநம்' என்றே வழங்கப்படும்'' என்று அவ்வூரிலுள்ளார் அனைவருக்கும் கூறினார் திருக்கோட்டியூர்நம்பி. இந்நிகழ்ச்சியிலிருந்து திருக்கோட்டியூர்நம்பி பெரியதீ$_3$ர்க்$_3$க$_4$த$_3$ர்ஶீ என்பதும், தனக்குக் கெட்டபெயர் வந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு உலகிற்குநன்மை விளையத்தேடுபவர் என்பதும் விளங்குகிறது.

அதற்குப் பிறகுநம்பி மிகவுகந்து ''உமக்குச் சரமஶ்லோகத்தின் அர்த்த$_2$த்தையும் உபதே$_3$ஶிக்க எண்ணுகிறேன். இப்பொழுது திருவரங்கம் சென்று நீர் ஒருவரே தனியாகவாரும்'' என்று அருளிச்செய்தார். அப்படியே எம்பெருமானாரும் மறுபடியும் ஒருமுறை திருக்கோட்டியூருக்கு வந்து த$_3$ண்டன் ஸமர்ப்பித்துநிற்க, நம்பி அவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு மேல் தளத்திலே ஏறி, தனியாகக் கதவைச் சாத்திக் கொண்டு ஒருவருக்கும் சொல்லாதபடி ஆணையிட்டு, தம்முடைய நிர்ஹேதுககருணையாலே சரமஶ்லோகத்தின் அர்த்த$_2$த்தையும் உபதே$_3$ஶித் தருளினார். அந்த அர்த்த$_2$த்தை எம்பெருமானிடம் ஈடுபாடில்லாதவர்கள் செவிப்படாதபடி ஜாக்$_3$ரதையாய் இருக்கவேண்டும் என்றும் நியமித்தார். அதற்கு எம்பெருமானார், 'இதைக் கண்டவர்களுக்கு வெளியிடமாட்டேன். ஆனால் கூரத்தாழ்வான் ஒருவருக்காவது சொல்லாதிருக்க முடியாதே'' என்று நம்பியைக் கேட்டார். அதற்கு நம்பி அவருக்கு மட்டும் ஒருவருடம் ஶுஶ்ரூஷை கொண்டு பரீக்ஷைசெய்தபிறகு சொல்லும் என்று நியமித்தார்.

ஸ்ரீரங்க$_3$த்திற்கு எம்பெருமானார் திரும்பியதும் ஆழ்வான் இதைக் கேள்விப்பட்டு ஒருவருடம் காத்திருக்க இயலாமையாலே, 'ஒருவருடம் ஆசார்யனுக்கு ஶுஶ்ரூஷைசெய்வதற்கு ஸமானம் அவர் திருமாளிகை வாசலிலே ஒருமாதம் உபவாசம் இருப்பது' என்னும் ஶாஸ்த்ரவிதி$_4$யின்படி ஒருமாதம் உபவாஸம் இருந்து எம்பெருமானாரிடமிருந்து சரமஶ்லோகார்த் த$_2$த்தைப் பெற்றார்.

அதற்குப்பின் முதலியாண்டான் எம்பெருமானார் திருவடிகளில் த$_3$ண்டன் ஸமர்ப்பித்து ''அடியேனுக்கும் சரமஶ்லோகார்த்த$_2$த்தை உபதே$_3$ஶிக்கவேணும்'' என்று ப்ரார்த்தி$_2$த்தார்.அதற்கு எம்பெருமானார் ''நான் ஆழ்வான் ஒருவருக்கு மட்டுமே அனுமதி பெற்றிருக்கிறேன். எனவே நீர் திருக்கோட்டியூர் சென்று நம்பியிடமே கேட்டுக்கொள்ளும்'' என்றார். அதன்படி முதலியாண்டானும் திருக்கோட்டியூர் வந்து நம்பியிடம் த$_3$ண்டன் ஸமர்ப்பித்து ஆறுமாஸம் அவர் திருமாளிகையில் காத்திருந்தார்.

விடைபெற்றுக்கொள்ளும்போது 'சரமஶ்லோகார்த்த$_2$த்தை அடியேனுக்கும் அருளவேணும்' என்று கேட்டார் முதலியாண்டான். அதற்கு நம்பி "கல்வி, த$_4$நம், குடிப்பிறப்பு ஆகியவற்ருல் உண்டாகும் மூன்று வகைப்பட்ட மத$_3$ங்களாகிற முக்குறும்பு நீங்கிஞல் எம்பெருமாஞர் தாமே உமக்கு அதை அருளுவார்" என்று ஸாதித்து, தன் திருவடித்தாமரைகளை முதலியாண்டான் தலைமீதுவைத்து அவருக்கு விடைகொடுத்தார். அதன்படியே ஸ்ரீரங்க$_3$த்திற்கு வந்த முதலியாண்டான் அடக்கமே உருவானவராக எம்பெருமாஞர் திருமுன்பே நின்று அவரைப் ப்ரார்த்தி$_2$த் ததும், அவருக்கு சரமஶ்லோகார்த்த$_2$த்தை உபதே$_3$ஶித்தருளிஞர் எம்பெருமாஞர்.

புறமதத்தவர்களும் பார்க்கக்கூடிய கீ$_3$தாப$_4$ாஷ்யத்தில் எம்பெருமாஞர் சரமஶ்லோகத்தின் முக்$_2$யார்த்த$_2$த்தை அருளிச்செய்யாமல் ப$_4$க்தியோக$_3$த்திற்கு அங்க$_3$ம் என்னும் அமுக்$_2$யார்த்த$_2$த்தையே காட்டியிருப்பதிலிருந்து, 'கண்டவர்களுக்கு இவ்வர்த்த$_2$த்தைச் சொல்லக் கூடாது' என்னும் நம்பியின் நியமனத்தை எம்பெருமாஞர் உறுதியாகப் பின்பற்றி நின்ருர் என்று விளங்குகிறது.

இவ்விடத்தில் நாயஞராச்சான்பிள்ளையருளிய சரமோபாய நிர்ணயத்திலுள்ள நம்பி, எம்பெருமாஞர் பற்றிய கீழ்க்கண்ட ஐதிஹ்யம் அனுஸந்தி$_4$க்கத்தக்கது:– திருக்கோட்டியூரிலே உடையவர் எழுந்தருளி நம்பிபக்கலிலே சரமஶ்லோகம் கேட்கிறபோது தஞ்சமான அர்த்த$_2$ விஶேஷங்களையெல்லாம் அருளிச்செய்து, "தேவரீரைப் பலகாலும் துவளப்பண்ணினத்தைத் திருவுள்ளத்திலே கொள்ளாதே கிடீர். அர்த்த$_2$த்தின் சீர்மையை வெளியிடவேண்டிச் செய்தோமித்தனை; தேவரீர் லோகஸம்ரக்ஷணர்த்த$_2$மாகத் திருவவதரித்தருளிற்று. நாத$_2$முனிகளுக்குத் தஞ்சமான விஷயம் தேவரீர். இப்படிப்பட்ட மஹாநுபாவனேட்டை ஸம்ப$_3$ந்த$_4$முண்டாகப் பெற்ருேம் என்று மார்பிலே கைபொகட்டு உறங்கலாம்படிக்கு உடலாயிருக்கிறது. எங்கள் ஆசார்யரான ஆளவந்தார் ஸ்ரீபாத$_3$த்திலே ஆஶ்ரயித்த முதலிகளிலே இத்த$_3$ர்ஶநத்தை நிர்வஹிக்க ஆளுண்டாயிருக்கவும், தேவரீரே த$_3$ர்ஶநப்ரவர்த்தகராக வேணுமென்று பேரருளாளன் ஸந்நிதி$_4$யிலே ப்ரபத்தி பண்ணியருளித் திருநாட்டுக்கு எழுந்தருளுகிறபோது 'இந்த மஹாநுப$_4$ாவனேடே நாலுநாளாகிலும் கலந்து பரிமாறப்பெற்ருேமில்லையே' என்று இழவோடே எழுந்தருளிஞர். ஆகையாலே இத்த$_3$ர்ஶநம் எம்பெருமாஞர்த$_3$ர்ஶநமென்று தேவரீர் திருநாமத்திஞலே நாள்தோறும் கொழுந்துவிட்டு விளங்கப்போகிறது" என்று அருளிச்செய்தார் திருக்கோட்டியூர்நம்பி(சரமோபாயநிர்ணயம்).

இதுவரையில் எம்பெருமாஞரை எம்பெருமாஞராக உருவாக்கியவர் திருக்கோட்டியூர நம்பியே என்பதும், அவரைக் கொண்டு சுயநலம் சிறிதுமற்ற ஓர் ஆசார்யபரம்பரை அமைவதற்கு அடித்தளம் அமைத்தவர் திருக்கோட்டியூர்நம்பியே என்பதும் நிரூபிக்கப்பட்டது. இனி எம்பெருமாஞரிடம் மிகவும் பரிவுகொண்டு அவரை அவ்வப்போது

நேரும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியவரும் திருக்கோட்டியூர் நம்பியே என்பது நிரூபிக்கப்படுகிறது.

உடையவர் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகளில் உஞ்ச$_2$வ்ருத்தி என்றும் மாது$_4$கரம் என்றும் சொல்லப்படும் பி$_4$க்ஷையைப் பெற்றே தே$_3$ஹயாத்ரையை நடத்தி வந்தார். ஸ்ரீரங்க$_3$த்தில் ''தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்திவைக்கும்'' பணியையும் மேற்கொண்டிருந்தபடியாலே, கோயில் கைங்கர்யபரர்கள் தவறுசெய்யாதபடி அவர்களைக் கண்காணித்துவந்தார். அவர்களில் ப$_3$ாதி$_4$க்கப்பட்ட ஒருவர் இவர் மேல் கோபம்கொண்டு இவர் உஞ்ச$_2$வ்ருத்திக்கு எழுந்தருளும்போது தன் மனைவியைக்கொண்டு விஷம் கலந்த உணவை அளிக்கும்படி நிர்ப$_3$ந்தி$_4$த்தார். மனத்தளவில் அதற்கு உடன்படாத அப்பெண்பிள்ளை அந்த அன்னத்தை இடும்போது மறித்து ஸமர்ப்பித்து த$_3$ண்டனிட்டுச் சென்றாள். எம்பெருமானாரும் அவளது குறிப்பை அறிந்து, அந்த விஷங்கலந்த அன்னத்தை, திருக்காவேரியிலே சேர்த்துவிட்டு உண்ணாமலே இருந்தார். திருக்கோட்டியூர்நம்பி பதறிக்கொண்டு ஸ்ரீரங்க$_3$த்திற்கு எழுந்தருளினார். அவரது வருகையைக் கேள்வியுற்ற எம்பெருமானார் தம் ஶிஷ்யர்களோடுகூட அவரை எதிர்கொண்டழைக்க நடந்துசென்றார். இருவரும் நடுப்பகலில் கோடைவெய்யில் அடிக்கும்போது நடுக்காவேரி மணலில் சந்தித்தனர். நம்பியைக் கண்டவுடன் எம்பெருமானார் அந்தக் கொதிக்கும் மணலில் த$_3$ண்டனிட்டுக் கிடந்தார். நம்பியும் சிலநிமிடங்கள் அவரை எழுந்திருக்கச்சொல்லாமலே இருந்தார். அப்போது எம்பெருமானாருடைய சீடர்களில் ஒருவரான கிடாம்பியாச்சான் கோபம்கொண்டு, ''இது என்ன ஶிஷ்யாசார்யக்ரமம்?'' கருமுகைமாலையை வெயிலிலே போடுவார்களோ'' என்று எம்பெருமானாரைப் பரிவுடன் தூக்கியெடுத்தார். உடனே நம்பியும், ''உம்மையன்றோ தேடினோம். இந்தத் திருமேனியில் பரிவுடையவர் நீரே. இன்று முதல் இவர் உஞ்சவ்ருத்திக்குச் செல்லவேண்டாம். நீரே ஏகமாது$_4$கரமாகத் தளிகைபண்ணி ப்ரஸாதி$_3$ப்பீர்'' என்று நியமித்தருளினார். கிடாம்பியாச்சானும் அவ்வண்ணமே எம்பெருமானாருக்கு மடைப்பள்ளிக் கைங்கர்யத்தைச் செய்துகொண்டு வந்தார். இவ்வரலாற்றிலிருந்து எம்பெருமானாருடைய திருமேனியில் மிக்கபரிவுடையவர் திருக்கோட்டியூர்நம்பி என்பதும், அத்திருமேனியில் பரிவுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் வல்லவர் என்பதும் விளங்குகிறது.

திருக்கோட்டியூர்நம்பி தம்முடைய ஸஹமாணாக்கரும் ஆளவந்தாரிடம் திருவாய்மொழியின் அர்த்த$_2$ங்களைக் கேட்டவருமான திருமாலையாண்டானைக் கொண்டு எம்பெருமானார் திருவாய்மொழியின் அர்த்த$_2$ங்களைக் கேட்கும்படிச்செய்தார். ஸ்ரீரங்க$_3$த்தில் அந்தத் திருவாய்மொழிகாலக்ஷேபம் நடந்துவரும்போது இடையிடையே ஆளவந்தார் ஸாதித்ததாகச் சில அர்த்த$_2$ங்களைச் சொல்லுவார்

திருமாலையாண்டான். அவற்றில் சில இடங்களில் ''இதைவிட இப்படி அர்த்த$_2$ம் சொல்லுவது நன்றாயிருக்குமே'' என்று எம்பெருமானார் கூறிவந்தார். அதனால் எரிச்சலுற்ற திருமாலையாண்டான் எம்பெருமானாருக்கு திருவாய்மொழிக்கு அர்த்த$_2$ங்கள் சொல்லுவதை நிறுத்திவிட்டார். இதைக் கேள்விப்பட்ட திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீரங்க$_3$த்திற்கு எழுந்தருளி, திருமாலையாண்டானிடம் காலக்ஷேபம் நின்றதின் காரணத்தை அறிந்து, எம்பெருமானார் ஸாதித்த அர்த்த$_2$த்தை ஆளவந்தார் தாம் காலக்ஷேபம் கேட்டபோது அருளிச்செய்தார் என்று கூறி, ''நீர் இவருக்குத் தெரியாத அர்த்த$_2$ங்களைச் சொல்லுவதாக நினைக்காமல் காலக்ஷேபம் ஸாதிப்பீராக. இவருக்கு ஆளவந்தாருக்குத் தோற்றின அர்த்த$_2$ம் தவிர வேறு அர்த்த$_2$ம் தோற்றாது. ஸாந்தீபனியிடம் கண்ணன் வேத$_3$ாத்$_4$யயநம் செய்ததுபோலே உம்மிடம் திருவாய்மொழிகாலக்ஷேபம் கேட்கிறார் என்றுகொள்ளும்'' என்று அருளிச்செய்து விட்டயிடத்திலிருந்து உடையவர் மட$_2$த்திலே திருக்கோட்டியூர் நம்பியும், திருமாலையாண்டானும், பெரியநம்பியும் கூட எழுந்தருளியிருந்து திருவாய்மொழிக் காலக்ஷேபத்தைத் தொடரச்செய்தார். அப்போது 'பொலிக பொலிக' என்னும் பாசுரம் வந்தவுடன் ''கலியும் கெடும்'' என்றவிடத்திலே நம்பியும் உடையவரை ஏறவும் இறங்கவும் பார்த்தார் என்றும், உடையவர் அத்தைக் கண்டருளி, ''இதற்குப்பொருள் யாது?'' என்று கேட்க, ''தேவரீர் திருவவதரித்து இதினுடைய அர்த்த$_2$த்தை வெளியிட்டுக் கொண்டு எழுந்தருளியிருக்கச் செய்தே கேட்கவேணுமோ? ப்ரபந்நகுலோத்$_3$த$_4$ாரகரான தேவரீரே இதற்குப்பொருள்; அஸ்மத$_3$ாதி$_3$களைக் கரையேற்றுகைக்காகவன்றோ நித்யவிபூ$_4$தியில் நின்றும் இங்கே எழுந்தருளிற்று'' என்று அருளிச்செய்தார் என்றும், இதைக் கேட்டிருந்த திருமாலையாண்டான் மயிர்கூச்செறியப்பெற்றவராய் ''இனி நான் ஆளவந்தாரை அறியேன்; எல்லாப்பேறும் தேவரீரே; தேவரீரோடு உண்டான ஸம்ப$_3$ந்த$_4$மே அடியேனுடைய பேற்றுக்கு ஸாத$_4$னம்'' என்று அருளிச்செய்தார் என்றும் நாயனாராச்சான்பிள்ளையருளிய சரமோபாய நிர்ணயத்தில் காணப்படுகிறது.

திருக்கோட்டியூர்நம்பியினுடைய திருக்குமாரருக்குப் பெயர் தெற்காழ்வான் என்பது. நம்பிக்குத் தே$_3$வகிபிராட்டி என்னும் சிறந்த ஜ்ஞாநமுடைய பெண்பிள்ளையும் இருந்தாள். அவ்விருவரையும் உத்$_3$த$_4$ாரகரான எம்பெருமானார்திருவடிகளிலே ஆஶ்ரயிக்கும்படிச் செய்தார் திருக்கோட்டியூர்நம்பி.

ஸ்ரீவல்லப$_4$பத$_3$ாம்பே$_4$ாஜதீ$_4$ப$_4$க்த்யம்ருதஸாக$_3$ரம் ।
ஸ்ரீமத்$_3$கே$_3$ாஷ்டீபுரீபூர்ணம் தே$_3$ஶிகேந்த்$_3$ரம் ப$_4$ஜாமஹே ॥

(ஶ்ரியஃபதியின் திருவடித்தாமரையில் ஞானமும், ப$_4$க்தியுமாகிற அமுதங்களுக்குக் கடல்போன்றவரும், திருக்கோட்டியூர்நம்பியென்னும் பெயருடையவருமான ஆசார்யோத்தமரை ஆஶ்ரயிக்கிறோம்.)

• • • • • • • • • •